**செய்தி வெளியீடு எண்: 204** **நாள்: 05.03.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.3.2019 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில் 3 கோடியே 21 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டாய உள்ளிருப்பு பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 47 கோடியே 69 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்வேறு அரசு மருத்துவ நிலையங்களின் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு, உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், நவீன மருத்துவக் கருவிகள் வழங்குதல், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தோற்றுவித்தல், மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களை நியமித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில் 3 கோடியே 21 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டாய உள்ளிருப்பு பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தலா 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையக் கட்டடங்கள்;

கிருஷ்ணகிரி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையக் கட்டடம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அரசு மாவட்ட தலைமை

மருத்துவமனையில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 48 படுக்கைகள் கொண்ட பிரிவு, அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்புப் பிரிவுடன் கூடிய அறுவை அரங்கம் மற்றும் புற நோயாளிகள் பிரிவுக் கட்டடங்கள்;

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையில் கடலூர் மாவட்டம் – கிருஷ்ணாபுரம், கரூர் மாவட்டம் – காணியாளம்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம் – ஜெகதேவி மற்றும் காமன்தொட்டி, நாகப்பட்டினம் மாவட்டம் – வடுகச்சேரி மற்றும் வேளாங்கண்ணி, கன்னியாகுமரி மாவட்டம் – குருந்தன்கோடு, விருதுநகர் மாவட்டம் – தாயில்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் – கோணுலாம்பள்ளம் மற்றும் பாளையப்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் – மெய்ஞானபுரம் மற்றும் முதலூர், வேலூர் மாவட்டம் – பனப்பாக்கம் ஆகிய இடங்களில் 15 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்;

திருவண்ணாமலை மாவட்டம் – முக்கூர், காஞ்சிபுரம் மாவட்டம் – பெரும்பாக்கம், திண்டுக்கல் மாவட்டம் – செங்குறிச்சி, ஈரோடு மாவட்டம் – ஆப்பகூடல், காஞ்சிக்கோவில் மற்றும் வெள்ளி திருப்பூர், கரூர் மாவட்டம் – அய்யம்பாளையம், கிருஷ்ணகிரி மாவட்டம் – கும்மளாபுரம் மற்றும் பெரியமுத்தூர், திண்டுக்கல் மாவட்டம் – ஆர். கோம்பை, திருநெல்வேலி மாவட்டம் – இலஞ்சி, திருவள்ளூர் மாவட்டம் – அயப்பாக்கம், வேலூர் மாவட்டம் – சின்னமோட்டூர் மற்றும் பீஞ்சமந்தை, திருவண்ணாமலை மாவட்டம் – வீரளூர், தூத்துக்குடி மாவட்டம் – சிங்கத்தாங்குறிச்சி ஆகிய இடங்களில் 9 கோடியே 14 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்;

திருவண்ணாமலை மாவட்டம் – பெருங்கட்டூர், மதுரை மாவட்டம் – கருங்காலக்குடி மற்றும் வெள்ளலூர், திருநெல்வேலி மாவட்டம் – சொக்கம்பட்டி, வேலூர் மாவட்டம் – பானாவரம், புதுப்பாடி, இலாலாப்பேட்டை மற்றும் ஒடுகத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சிறுகாம்பூர், வையம்பட்டி, தண்டலைப்புத்தூர் மற்றும் உப்பிலியபுரம், ஆகிய இடங்களில் 7 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புற நோயாளிகள் பிரிவுக் கட்டடங்கள்;

திருநெல்வேலி – துணை சுகாதார பயிற்சிப் பள்ளியில் 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 60 விடுதி அறைகள்;

என மொத்தம் 50 கோடியே 90 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 6 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவனையில் 5 கோடியே 47 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி ஆகியவற்றின் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு.என். தளவாய் சுந்தரம், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைச் செயலாளர் டாக்டர் பீலா ராஜேஸ், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை கூடுதல் செயலாளர் திரு.எஸ். நாகராஜன், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் பி. உமாநாத், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எட்வின் ஜோ, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் என். ருக்மணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**